தென் இந்தியயாத்திரை
ஆவணி முதல் வாரத்தில்...
உல்லாச பயணம்....
தமிழகம், ஆந்திரா, கேரளம்,
கர்நாடகம்.... ....
பல தலங்கள், சரித்திர இடங்கள்
கண்டுகளிக்கலாம்......
சத்தியா ரவல்ஸ்
(உல்லாச பயணச் சபையால் அங்கீகரிக்கப்பட்டது)
224/A கே. கே. எஸ். வீதி.
யாழ்ப்பாணம். போன்: 7677

பக்கங்கள் 8 விலை சதம் 40 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 20 ஆனி 5 [illegible] 13 இதழ் 126
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 19-6-78

RECEIVED
1978-6-19
PERIODICALS DIVISION
LIBRARY

லாலா சோப்
பிரகாச சலவை!
பளிச்சிடும் வெண்மை!
ஈழம் எங்கும் கிடைக்கும்
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி

## ஆகஸ்ட் முதல் யாழ். வளாகம்

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக மாறுகிறது!

## கல்வி அமைச்சர் தகவல்

(யாழ்ப்பாணம்)

**"யாழ்ப்பாணவளாகம் ஆகஸ்ட்மாதம் முதல் பூரணசுதந்திரத்துடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயரில் இயங்கவிருக்கிறது. இதுபோல் ஏனைய ஏழு வளாகங்களும் பூரண சுதந்திரம் பெற்ற பல்கலைக்கழகங்களாகத் திகழும்."**

**இத்தகவலை கல்வி அமைச்சர் திரு. நிஸங்கா விஜயரத்ன நேற்று யாழ். வளாகத்தில் வெளியிட்டார்.**

நேற்றுக்காலை 10 மணியளவில் தமது பாரியார், புத்திரர் சகிதம் யாழ். வளாகம் வந்த அமைச்சரை வளாகத்தலைவர் கலாநிதி சு. வித்தியானந்தன் மற்றும் விரிவுரையாளர்கள், மாணவர் மன்றத்தலைவர் வ. ஜ. ச. ஜெயபாலன் ஆகியோர் வரவேற்றனர்.

முதலில் வளாகத்தினுள் அமைந்த ஆலயத்தினுள் சென்று வணங்கிய அமைச்சருக்கு, ஆலயகுரு மாலை அணிவித்துக் கௌரவித்தார்.

வழிபாட்டின் பின் அமைச்சர், பிரமுகர்கள் புடைசூழ மேல் மாடிக்கு அழைத்துவரப்பட்டார். அங்குள்ள மண்டபத்தில் தேநீர் விருந்தளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அமைச்சர் உரையாற்றினார். அவர் தமது உரையில் கூறியதாவது:

### நாட்டுக்குச் சொந்தமானது

ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தின் பெயரைக் கொண்டதால் இது இப்பகுதிக்கு மட்டும் சொந்தமென்று கருதப்படக் கூடாது. இப்பல்கலைக்கழகம் இந்நாட்டுக்கே சொந்தமானது; சேர் பொன் இராமநாதனின் இலட்சியக்கனவு, இக்கட்டிடம் பல்கலைக்கழகமாக்கப்பட்டு கல்வித்துறையில் தொண்டாற்றி சேவை புரிவதன் மூலமே நிறைவேற்றப்படுகிறது; அவரது இலட்சியம் மேன்மையானதால் இப் பல்கலைக்கழகம் சகல வசதிகளுடன் சுதந்திரம் பெற்று பூரணமாக இயங்க இருக்கிறது.

### மாணவரிடையே நிலவும் அதிருப்தி

"இன்று பல்கலைக்கழகங்களில் மாணவசமுதாயத்தினரிடையே பெரும் அதிருப்தி நிலவுகிறது. இதற்கு முக்கிய காரணம், பல்கலைக்கழகத்திலிருந்து வெளிவந்த பின் இவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பது பெரும் கஷ்டமாக இருப்பதே ஆகும். இதனால் விரக்தியுறும் மாணவ சமுதாயம் பல்கலைக்கழகங்களில் பல வன்செயல்களிலும் ஈடுபடுகின்றனர். இந்நிலை கொழும்பு, பேராதனை, வித்தியோதய வித்தியாலங்காரா, யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு மட்டுமன்றி உலகெங்கும் உண்டு. இதனைப் போக்க எமது 'தீர்மிஷ்ட' அரசு கைத்தொழில் விவசாய மூலத்தினை நன்கு விருத்தி செய்து வேலையில்லாப் பிரச்சனையைத் தீர்க்க கங்கணம் கட்டியுள்ளது. அதில் நாம் வெற்றி பெறுவோம் என்று எண்ணுகிறேன்.

### யாழ். வளாக உபவேந்தர்

சகல வளாகங்களும் பல்கலைக்கழகங்களாக எல்லாத் துறையிலும் பூரண சுதந்திரத்துடன் இயங்கும்போது கல்வித் துறைகள் பற்றிய தீர்மானமும் அந்தந்த பல்கலைக்கழகத்தின் பொறுப்பிலேயே விடப்படும். பல்கலைக்கழக சட்டம் விரைவில் நிறைவேற்றப்பட இருக்கிறது. அரசாங்கத்தால் 7 உப வேந்தர்கள் நியமிக்கப்படுவர். யாழ்ப்பாணம் பல்கலைக்கழக உபவேந்தராக முதன் முதலில், எனது இனிய நண்பர் கலாநிதி சு. வித்தியானந்தன் நியமிக்கப்படுவார். பல்கலைக்கழகங்கள் மந்திரி சபைக்குக் கட்டுப்படாது சுயமாகச் செயல்பட சட்டம் இயற்றப்படும். எனினும் முக்கிய நிர்வாக விடயங்களிலும், ஏனைய பிரச்சனைகளிலும் அவசியமெனின் மந்திரிசபை தலையிடலாம்.

மாணவர்களிடையே கட்டுதவு மனப்பான்மை, கூடிய உணர்ச்சி, பொறுப்புணர்ச்சி நல்லொழுக்கம் ஆகியவற்றை வளர்ப்பதில் ஆசிரியர்களும் முக்கிய பங்கேற்க வேண்டும். உண்மையான கல்வி வளர்ச்சியின் முக்கிய அம்சம் இது

(8-ம் பக்கம் பார்க்க)

அரசின் புதிய சட்டங்கள் பற்றி
தோழர் பாலதம்பு அவர்கள்
உரையாற்றுவார்கள்.
காலம்: ஜூன் 20ம் திகதி செவ்வாய்க்கிழமை
இடம்: வீரசிங்கம் மண்டபம்.
நேரம்: மாலை 4 மணி.
அனைவரும் திரண்டு வருக.
இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம்
புரட்சிகர மார்க்சிய கட்சி
9023

## நயினையில் இன்று தேர் பக்தர்கள் தொகை அதிகரிப்பு

(நயினாதீவு)

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேர்த்திருவிழாவுக்கான சகல பாதுகாப்புச் சேவைகளும் செய்யப்பட்டுள்ளன. கடற்பயணங்களில் எத்தவித அசம்பாவிதங்களும் நடைபெறுமலிருக்க, நயினாதீவு ஞானவைரவர் ஆலய நிர்வாகிகள் உயிர்பாதுகாப்புச் சேவையொன்றினை இம்முறை ஏற்படுத்தியுள்ளனர்.

கடந்த வருடங்களிலும் பார்க்க இம்முறை நாட்டின் சகல பகுதிகளிலிருந்தும் அதிகமான தொகையில் பக்தர்கள் நயினாதீவு வந்துள்ளனர். அனலைதீவு, நெடுந்தீவு, இறம்பிட்டி, குறிகாட்டுவான், காவற்றுறை இறங்குதுறைகளில், படகுச்சேவை போதாமையினால் அதிகமான பக்தர்கள் இறங்குதுறைகளில் தங்கியிருக்க வேண்டி ஏற்பட்டது. யாழ். பஸ்நிலையத்தில் நேற்று நீண்டவரிசைகளில் மக்கள் நின்று பிரயாணத்தை மேற்கொண்டனர்.

அருந்தகம் சகல அடியார்களுக்கும் உணவு வழங்கி வருகிறது. புங்குடுதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தனது இருபடகுகளையும் சேவையில் ஈடுபடுத்தி, யாத்திரிகர்களின் வசதிக்காக கக்கள் கடை

(8-ம் பக்கம் பார்க்க)

### முன்னாள் ப. ச. தலைவர்

## வஸ்தியாம்பிள்ளை மறைவு: முல்லைத்தீவில் பூரணதுக்கம்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு பட்டின சபை முன்னாள் தலைவர் எம். என். வஸ்தியாம்பிள்ளை மறைவு குறித்து முல்லைத்தீவுத் தொகுதியில் பூரண துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

கடைகள் யாவும் அடைக்கப்பட்டு எங்கும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டது.

இன்று காலை மக்கள் பட்டினசபை மண்டபத்தில் இறுதி அஞ்சலி செலுத்துவார்கள். அதன்பின் இறுதியாத்திரை நடைபெறும். இன்று பட்டினசபை நடைபெறாது.

முல்லைத்தீவு எம். பி. திரு. எக்ஸ். எம். செல்லத்தம்பி தலைமையிலான குழு சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளது.

[ஈ]

### புனித சின்னங்களுக்கு

## யாழ். நகரில் கிடைத்த வரவேற்பு: அமைச்சர் பெருமிதம்

### "சிதைந்துபோன ஐக்கியத்தை கட்டி எழுப்புவோம்"

(யாழ்ப்பாணம்)

"யாழ்ப்பாணச்சரித்திரத்தில் இன்று முக்கியமான நாள். முன்பு புத்தபகவான் நயினாதீவுக்கு வந்திருந்தார். இன்று மீண்டும் அவரது புனித சின்னங்கள் வந்துள்ளதால் யாழ்ப்பாணம் புனிதமடைந்துள்ளது."

யாழ் நாகவிகாரையில் கபிலவஸ்து புனித சின்னத்திற்கு மலர்தூவி வரவேற்றும் பேசிய கலாச்சார அமைச்சர் திரு எல். பி. ஹேரத் விண்டவாறு கூறினார்.

அமைச்சர் ஹேரத் மேலும் கூறியதாவது: யாழ்ப்பாணத்தில் சகல இனத்தவர்களும் ஒற்றுமையாகவும், உற்சாகமாகவும் புனித சின்னங்களை வரவேற்பார்கள் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. நான் புனித சின்னங்களுடன் இலங்கையில் பல இடங்களுக்கும் சென்றிருக்கிறேன். ஆனால் யாழ்ப்பாணத்தில் சகல இன மக்களும் ஒன்றுசேர்ந்து அளிக்கப்பட்ட வரவேற்புப்போல் எங்கும் காணவில்லை. இழந்த ஒற்றுமை இப்புனித சின்னங்களின் விஜயத்தினால் மீண்டும் ஏற்படும் என்று ஆசீர்வதிக்கிறேன்.

### கல்வி அமைச்சர் தரிசனம்

யாழ்ப்பாணம் நாகவிகாரையில் கபிலவஸ்து புனித சின்னத்தை நேற்று பகல் கல்வி அமைச்சர் திரு. நிஸங்கா விஜயரத்ன குடும்பத்

(8-ம் பக்கம் பார்க்க)

# வடக்கு கிழக்கில் நிர்வாக நீதிமன்ற மொழியாக தமிழ்!

## மொழிப் பாகுபாட்டிற்கு முற்றுகதத்டை; தேர்தலில் விகிதாசார தெரிவு முறை

### தெரிவுக் குழுவின் சிபார்சுகள்

— மாலி —

அரசியலமைப்பைத் திருத்துவதற்கான தெரிவுக் குழுவின் அறிக்கை இம் மாதம் 22ந் திகதி தேசிய அரசுப் பேரவை கூடும் போது சபையில் சமர்ப்பிக்கப்படுமென்று நம்பகமாக எதிர்பார்க்கப்படுகிறது.

தெரிவுக்குழு அதன் அமர்வுகளை முடித்துக் கொண்டிருக்கிறது அறிக்கையும் தயாரிக்கப்பட்டுவிட்டதாகத் தெரிகிறது.

தற்போதைய அரசியலமைப்பைத் திருத்துவதற்கான தெரிவுக்குழு ஒன்று தெரிவு செய்யப்பட வேண்டுமென்று சபை முதல்வர் திரு. ஆர். பிரேமதாச கடந்த ஆண்டு ஒக்டோபர் 10ந் தேதி சபையில் பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்தார்.

அதன்படி, நவம்பர் 3ந் தேதி தெரிவுக்குழுவுக்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் பெயர்களை சபாநாயகர் திரு. ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் சபையில் அறிவித்தார்.

### ஜே. ஆர். தலைமையில் தெரிவுக்குழு

அப்போது பிரதமராக இருந்த திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன தலைமையில் திருவாளர்கள் ஆர். பிரேமதாச, லலித் அத்துலத் முதலி, ரொனி டி மெல், காமினி திசநாயக்கா, கே. டபிள்யூ. தேவநாயகம், ஜனாப் எம்.எச். முகம்மது, எஸ். தொண்டமான், திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க, திரு. மைத்திரிபால சேனநாயக்கா ஆகியோர் இத் தெரிவுக்குழுவில் நியமிக்கப்பட்டனர்.

### கூட்டணியினர் பங்கு பற்றவில்லை

பிரதான எதிர்க்கட்சியினரும் இந்நாட்டின் இரண்டாவது பெரிய தேசிய இனமான தமிழினத்தை பெருமளவில் பிரதிநிதித்துவம் படுத்துபவர்களுமான தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இத் தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்கவில்லை.

இக்குழுவில் அங்கம் வகிக்க அவர்கள் மறுப்புத் தெரிவித்திருந்தபோது அந்த முடிவை மறுபரிசீலனை செய்து, குழுவில் அங்கம் வகித்து ஆலோசனையும் ஒத்துழைப்பையும் அளிக்கும்படி திரு. பிரேமதாச சபையில் [illegible]ப்பான அழைப்பை விடுத்தபோதும் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பூரணமாகவே மறுப்புத் தெரிவித்து விட்டனர்.

### கூட்டணி நிலை

நல்லூர் உறுப்பினர் திரு எம். சிவசிதம்பரம், சாவகச்சேரி உறுப்பினர் திரு வி. என். நவரத்தினம் ஆகியோர் தங்கள் நிலைமைபற்றி அப்போது சபையில் விளக்கினார்கள்.

தெரிவுக்குழுவின் நடவடிக்கைகளை அவதானித்து, அதன் பின்னர் மேல் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்று அவர்கள் தெரிவித்தனர்.

இதற்குமுன்னதாக, சபை முதல்வர் திரு. பிரேமதாச சபையில் இப்பிரேரணையைக் கொண்டுவந்த போது, இக் குழுவில் தாம் அங்கம் வகிப்பதுபற்றி நடவடிக்கைக்குழுவே தீர்மானிக்க வேண்டுமென்றும் எனவே ஒரு பத்து தினங்களுக்கு தெரிவுக்குழு நியமனத்தை ஒத்திவைக்கும் படியும் எதிர்க்கட்சித் தலைவர் திரு அ. அமிர்தலிங்கம் சபையில் கேட்டிருந்தார்.

### நடவடிக்கைக்குழு முடிவு

அதன் பின்னர் கூடிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைக்குழு மிக நீண்ட நேர சாதகபாதகமான விவாதங்களின் பின்னர் தெரிவுக் குழுவில் பங்குபற்ற வேண்டாம் என்று கூட்டணிப் பாராளுமன்றக் குழுவைப் பணித்திருந்தது.

தெரிவுக்குழுவில் பங்கு பற்றக்கூடாது என்றே நடவடிக்கைக்குழு தீர்மானித்திருந்த போதும், தெரிவுக் குழுவில் பங்கு பற்றி குழுவில் தங்கள் தீர்மானங்கள் ஏற்றுக் கொள்ளப்படாத பட்சத்தில் குழுவிலிருந்து வெளிநடப்புச் செய்யலாமென்று ஒரு சாராரும், தெரிவுக்குழுவில் முற்று முழுதாக பங்கு பற்ற வேண்டும் என்று இன்னுஞ் சிலரும் கருத்துக்கள் கொண்டிருந்ததாகவும் கூறப்பட்டது.

எனினும் நடவடிக்கைக்குழுவின் தீர்மானத்தை ஏற்று கூட்டணிப் பாராளுமன்றக் குழு தெரிவுக் குழுவில் பங்கு பற்றவில்லை.

### சுதந்திரக்கட்சி பங்கு பற்றியது

திருத்தம் கொண்டு வரப்படும் அரசியலமைப்பை யாத்தவர்களான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினரும் தெரிவுக்குழுவில் அங்கம் வகித்தனர்.

தெரிவுக்குழு பின்னர் 21 விளம்பரங்களைக் கொடுத்து ஒன்றைத் தயாரித்து அரசியல், பொது நிறுவனங்கள் பொது மக்களிடமிருந்து ஆலோசனைகளைக் கோரியதுடன் அவர்களைச் சாட்சியமளிக்கும் அழைத்திருந்தது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் திருவாளர்கள் சி. பி. இலங்கரத்தின, டொனி சேனநாயக்கா, நிசங்க ஜயவிக்கிரம, எம். எம். விஜயரத்தின, கே. சண்முகலிங்கம் ஆகிய ஐவர் சாட்சியமளித்தனர்.

### 94 பேர் சாட்சியம்

திரு: குமார் பொன்னம்பலம் தலைமையில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் வாலிபமுன்னணியைச் சேர்ந்தவர்கள் 7 பேரும், தமிழ் மக்கள் இயக்கத்தைச் சார்ந்த 7 பேரும் தேயாலைத் தமிழர் விடுதலை முன்னணியைச் சேர்ந்தவர்கள் 6 பேரும், முஸ்லிம் லீக்கைச் சேர்ந்த 10 பேரும் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸைச் சேர்ந்தவர்கள் இருவரும் பௌத்த காங்கிரஸிலிருந்து 7 பேரும், ஸ்ரீலங்கா பௌத்த பெரமுனையைச் சேர்ந்த 6 பேரும் மலாயர் லீக், தமிழ் அலுவலகர் கழகம், இலங்கை குடியுரிமைகள் இயக்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் உட்பட பொதுமக்களுமாக 94 பேர் குழுமுன் சாட்சியமளித்துள்ளனர்.

### 16 தினங்கள் கூடியது

ஜனவரி 18ந் தேதி, முதல் தடவையாகக் கூடியகுழு, இம் மாதம் 7ந்தேதி அதன் அமர்வுகளை முடித்துக்கொண்டது. 16 தினங்களுக்குக் குழு கூடியிருக்கிறது.

### தமிழ் தேசிய மொழி

அரச மதமாக பௌத்தம், அரசகரும மொழியாக சிங்களம் என்று தொடர்ந்திருக்குமதேவேளை, இங்கிலீசும், தமிழும் தேசிய மொழிகளாக அரசமைப்பில் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றும்,

தமிழ், தேசிய அரசப் பேரவையிலும், உள்ளூராட்சி மன்றங்களிலும் பிரயோகிக்கப்படவும், போதனா மொழியாகவும், சட்டவாக்க மொழியாகவும், வடக்கு கிழக்கில் நிர்வாக மொழியாக நீதிமன்றங்களில் நடைமுறைப்படுத்தவும் வேண்டும் என்றும்,

மொழிவாரியான பாரபட்சம் திட்டவட்டமாக தடை செய்யப்படவேண்டும் என்றும் தெரிவுக்குழு சிபார்சு செய்திருப்பதாகத் தெரிகிறது.

அடிப்படை உரிமைகள் விஸ்தரிக்கப்பட்டு, தன்னிச்சையாக கைதுசெய்தல், காவலில் வைத்தல், தண்டனை விதித்தல் ஆகியவற்றிலிருந்து சுதந்திரம் வழங்கவும்,

சித்திரவதையிலிருந்து சுதந்திரம் வழங்கவும் சிபார்சு செய்திருப்பதாகவும் தெரிகிறது.

பாரபட்சம் ஒழிக்கப்பட வேண்டும் என்றும்,

கடந்த காலத்தை உள்ளடக்கும் தண்டனைச் சட்டவாக்கம் தடை செய்யப்படவேண்டும் என்றும்,

உரிமைகள் மீறப்படின் மேல்மன்றம் மூலம் பரிகாரம் தேடும் உரிமை அளிக்கப்படவேண்டும் என்றும் குழு மேலும் சிபார்சுகளைச் செய்திருப்பதாகத் தெரிகிறது.

### பிரஜா உரிமை தொடர்பாக

பிரஜாவுரிமைகள் தொடர்பாக புதிய ஓர் அத்தியாயம் சேர்க்கப்படவும் சிபார்சு செய்யப்படுகிறது.

இதன்படி வம்சாவழிப் பிரஜை, பதிவுப் பிரஜை என்ற வேறுபாடின்றி அனைவரும் "இலங்கைப் பிரஜை" என்றே அழைக்கப்பட குழு சிபார்சு செய்கிறது.

### அரச ஊழியர் தொடர்பாக

அரசாங்க ஊழியர் தொடர்பாக இதுவரை இருந்துவந்த சோல்பரி அரசியல் திட்ட முறைகளும் மாற்றப்படவிருக்கின்றன.

அரசு ஊழியர் நியமனம், வேலை நீக்கம், இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு ஆகியன அரசசேவை ஆணைக் குழுவிலிருந்து மந்திரிசபைக்கு மாற்றப்படவிருக்கிறது.

எனினும், கொள்கைவகுத்தலில் ஈடுபடும் உயர் அதிகாரிகள் தவிர ஏனையோர் தொடர்பான இவ்விஷயங்களைக் கவனிக்க அரசசேவை ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படும் என்றும், அவர்களைவிட மந்திரிசபை ஒரு மேன்முறையீட்டுத்தானமாக இருக்கு மென்றும் தெரிகிறது.

இவையே அநேகமாக அரசியலமைப்புத் தெரிவுக் குழுவின் முக்கிய சிபார்சுகள் எனத் தெரிகிறது.

தேர்தல்களில் விகிதாசார தெரிவுமுறையும் கொண்டு வரப்படவிருக்கிறது.

### தொண்டமான் ஆதரவு

அரசியலமைப்புத் திருத்தத் தெரிவுக் குழுவின் இச் சிபார்சுகளை இ. தொ. கா. தலைவரும் இக் குழுவின் ஓர் உறுப்பினருமான திரு. எஸ். தொண்டமான் சில குறிப்புரைகளுடன் ஆதரிக்கிறார்.

### திருத்த மசோதாவாக

இத் திருத்தங்களை உள்ளடக்கி புதிதான ஓர் அரசியலமைப்புச் சட்டமாகவே கொண்டுவர அரசு கருதுவதாகவும் புதிய அரசியலமைப்புச் சட்டமாகவன்றி தற்போதுள்ள அரசியலமைப்புக்குத் திருத்தமாகவே இவை கொண்டுவரப்படவேண்டுமென்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கருத்துத் தெரிவித்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

தெரிவுக்குழுவின் திருத்தங்களையொட்டி தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் நடவடிக்கைகள் எப்படி இருக்கப் போகின்றன என்பதைத்தான் இலங்கையில் மட்டுமல்ல சர்வதேச அரசியல் அவதானிகளும் எதிர்பார்த்திருக்கிறார்கள். (க)

(தொடரும்)

---

வவனியா

## சுகாதார அத்தியட்சர் பிரிவு 1979 முதல் தனித்தியங்கும்

(யாழ்ப்பாணம்)

இருவருடங்களுக்கு முன்னர் கடந்த அரசாங்கத்தினால் யாழ் மாவட்ட சுகாதாரசேவை அத்தியட்சர் பிரிவுடன் இணைக்கப்பட்ட வவனியா மாவட்ட சுகாதாரசேவை அத்தியட்சர் பிரிவு, 1979ம் ஆண்டு ஜனவரிமாதம் தொடக்கம் மீண்டும் தனியாக இயங்கவிருக்கிறது. இதற்கான உத்தரவு சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது.

வவனியா சுகாதாரப்பிரிவு யாழ். மாவட்டத்துடன் இணைக்கப்பட்டதினால் பல்வேறு நிர்வாக சிக்கல்களுடன், வவனியாப்பகுதியிலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் கடமையாற்றும் ஊழியர்கள் தங்கள் அலுவல்களைக் கவனித்துக் கொள்ள யாழ்ப்பாணம் வர வேண்டிய கஷ்டங்களும் ஏற்படுகின்றன.

இப்பிரச்னைகள் குறித்து வவனியா, மன்னார், முல்லைத்தீவு தொகுதிகளின் எம். பி. க்கள், புதிய அரசாங்கம் பதவிக்கு வந்தவுடன் சுகாதார அமைச்சர் திரு. காமினி ஜயசூரியவுடன் நடாத்தியபேச்சுவார்த்தையின் [illegible] வவனியா சுகாதார அத்தியட்சகர்பிரிவு மீண்டும் வவனியாவில் தனியாக இயங்க உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

(பண்-நி)

## இவருக்குத் தகுதியில்லை

(கொழும்பு)

திரைப்படக் கூட்டுத்தாபனத் தலைவர் திரு. வி. மாரலிங்க அப்பதவிக்குத் தகுதியற்றவர் என்று தெரிவுக்குழு ஒன்று அரசுக்கு சிபார்சு செய்துள்ளது.

உயர் பதவி வகிப்பவர்களின் தகுதிபற்றி ஆராய நியமிக்கப்பட்ட குழுவே மேற்கண்டவாறு சிபார்சு செய்துள்ளது.

பிரதமர் திரு. ஆர். பிரேமதாச, எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், நிதி அமைச்சர் திரு. ரொனி டி மெல் உட்பட மற்றும் சிலர் இத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர். (ம-இ)

## வவனியாவிலும் 'வாசு' கோஷ்டி வெற்றி!

(யாழ்ப்பாணம்)

அரசாங்க விகிதச்சேவைச் சங்கத்தின் வவனியாக்கிளையின் நிர்வாகிகள் தெரிவுக்கு நடைபெற்ற தேர்தலில் "வாசுதேவ" கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் வெற்றியீட்டினர்.

குறுகிய விடுதலை ரத்து செய்தல்; விவாகப்படி ரத்துச்செய்தல்; 55 வயதில் இளைப்பாறுதல்; ஏற்றவிபரீதச்சம்பளக் கட்டணம் அறவிடல் ஆகிய இழந்த சலுகைகளை மீண்டும் பெறவும் ஆகக்குறைந்த சம்பளம் 355/-ஆக்குதல்; 8வருடத்தின்பின் 1ம் தர உயர்வுபெறுதல் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து வாசு கோஷ்டியினர் போட்டியிட்டனர்.

வவனியாக்கிளைக்கு தெரிவானவர்கள் விபரம் பின்வருவாறு:-

தலைவர்: எஸ். வேலுப்பிள்ளை, உபதலைவர்கள்: சி. மனம்பேரி, வி. சிவானந்தம், செயலாளர்: ஏ சிவதாசன், உபசெயலாளர்: கே. பவானந்தன்; பொருளாளர்: எச். எம். திசாநாயக்கா

பின்வரும் 11 அங்கத்தவர்கள் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

டி எம் பி ஆரியவன்ச, கே. கே. கமலநாதன், வீ கந்தையா, கே நடராசா, சி. நடேசன், கே பாலரத்தினம், கே ரண்பண்டா, ஏ ஜே சபாரத்தினம், ஆர் எம் சமரவீர, ஆர் எம் சரவணமுத்து, வீ விஜயநாதன்,

பொதுச்சபை உறுப்பினர்களாக எஸ் வேலுப்பிள்ளை, கே. கே. கமலநாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். [ச]


தயிலை ஸ்ரீ நாகபூசணி அம்பாள் இருபை, பக்தர்களுக்கு கிட்டட்டும்...

சிக்கனத்தின் சின்னம், சிறப்பின் சிகரம், லாலா தயாரிப்புக்கள்.

★ லாலா நீல சோப்

★ சன்சயின் சோப்

★ லாலா பார் சோப்

பாவனையில் பளிச்சிடும் வெண்மை — லாலா

லாலா சோப் தொழிற்சாலை

அச்சுவேலி.

# நயினைக்கரையில் அலைபுரளும் மக்கள் வெள்ளம்

## ‘அரோகரா’ கோஷத்துடன் இன்று அம்பாள் ரத பவனி

இன்று நயினை நாகபூஷணியம்மை
தேர்த் திருவிழா

**மணித்தேர் அமர்ந்து
மண்ணினைப் புரப்பாய்**

நயினைநா கேஸ்வரியே! நாடு மடியார்
செயிரகற்றிச் செய்வாய் சுகம்.
0 0 0
நயினை நாக பூஷணியே!
நாக ரத்தினம் பூண்டொளிர்வோய்!
அயிலை நிகர்த்த விழியாளே!
அடியவ ருள்ளத் தொளிர்பவளே!
கயிலை ஈசர் ஈஸ்வரியே!
கவினுர் நாக பூஷணியே!
ஒயிலாய் மணித்தேர் மீதிவர்ந்து
உலகந் தன்னைப் புரப்பாயே!

—கவியரசு முருகசூரியன்

(சேபிர்—குற்றம்)

வரலாற்றுச் சிறப்பு மிக்கதும், எண்ணற்ற பக்தர்களின் நெஞ்சங்களில் இஷ்ட தெய்வமாக இரண்டறக் கலந்திருப்பவளுமான நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் ரதோற்சவம் இன்றாகும்.

ரதோற்சவத்தை முன்னிட்டு நாட்டின் பல பாகங்களிலிருந்தும் சில தினங்களுக்கு முன்பிருந்தே பக்தர்கள் வெள்ளம்போல் வந்து ஆலயத்தில் திரண்டுள்ள பக்தி ரஸமிக்க காட்சி [illegible] கிடைப்பதாகும்.

அம்பாளின் தரிசனம் வேண்டிவரும் பக்தர்களின் சௌகரியம் கருதி விசேட ஏற்பாடுகள் ஆலயத்தில் செய்யப்பட்டிருக்கின்றன.

புங்குடுதீவின் இரு துறைகள் மூலம் படகுச்சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. குறிகாட்டுவான் துறைமூலமும் இறுப்பிட்டித் துறை மூலமும் இச்சேவை இடம் பெறுகிறது.

மற்றும் இதனைச் சூழவுள்ள அனலைதீவு, எழுவைதீவு, நெடுந்தீவு முதலான தீவுகள் ஊடாகவும் பக்தர்கள் ஆலயத்தை அடைய ஏற்பாடாகியிருக்கிறது.

“அமுதசுரபி” அன்னதான சபை பக்தர்களுக்கு வழக்கம்போல் தன் சிறந்த பணியை ஆற்றுகிறது. நயினை ஸ்ரீ ஞான வைரவர் ஆலய முன்னேற்றச் சமூகத்தினரின் பாதுகாப்புச் சேவையும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

கடலில் படகுகள் சென்று கரை திரும்பும்வரை முன்னெச்சரிக்கையாக இப்பாதுகாப்பு ஏற்பாடு நடைபெறுகிறது.

தத்தம் இஷ்டசித்திகளைப் பெற்றுய்யும்வண்ணம் கடலலைக்குப் போட்டியாக அலை

[8-ம் பக்கம் பார்க்க]

நயினையில் குடிகொண்டிருக்கும் ஸ்ரீ நாகபூசணி அம்மாள்
சகல அருளும் பொழிவாளாக...!

வடபகுதியின் மக்கள்
முன்னோடியான நிறுவனம்.

சகல தேவைகளுக்கும்
இன்றே விஜயம் செய்யுங்கள்

**எஸ். பி.
சாமி அன். கோ.**

193, மின்சாரநிலையவீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7025

நயினை நாகபூசணி அம்பாள் இரதோற்சவத்தில்
பவனிவரும் காட்சித் திருநாளில் சகலருக்கும்
அருள்பாலிக்க...

இறக்குமதிசெய்யப்பட்ட ரயர்—ரியூப்புக்கள்
பசளைவகைகள், பலசரக்குப் பொருட்கள்,
அலங்காரசாதனங்கள், அன்றாட தேவைகள்
அனைத்துக்கும்

மொத்த சில்லறை வியாபாரிகள்.

**எஸ். வி. முருகேசு,**

154, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
போன்: 564.

நயினையில் திருத்தேரமர்ந்து திருவருள் பாலிக்கும்
நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மாளின் தேர்த்திருக்காட்சி
காண அலைகடல் கடந்து திக்கெட்டும் இருந்து
திரண்டுவரும் அடியார்களுக்கு அம்பாளின்
அருள் பாலிக்கட்டும்.

**சாந்தி லொட்ஜ்**

சைவ ஹொட்டல்
(பஸ்நிலைய முன்பாக)

410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

நயினையில் அருள்பாலிக்கும், ஸ்ரீ நாகபூசணி அம்பாள்
யாத்திரிகர்களுக்கு பல்வகை சிறப்புகளையும்
வாரிவழங்கட்டும்.

இறக்குமதி செய்யப்பட்ட
பல்வகை பொருட்களின் கோபுரம்...

மணிக்கூடுகள்;
விளையாட்டுச் சாமான்கள்,
நானாவித பொருட்கள்,
காஸ் அடுப்புகள்
இன்னும் பல...

**சி. சின்னத்துரை
அன் பிறதர்**

இல. 39, கே. கே. எஸ். வீதி. யாழ்ப்பாணம்.
போன்: 284 தந்தி: கல்வி

அருள்மிகு நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின்
திருவருள் பாலிக்க

வடபகுதி ஏற்றுமதியாளர்களே!
அரிய சந்தர்ப்பம்!!

- மோட்டார் வாகனங்கள் உதிரிப்பாகங்கள்
- சைக்கிள்கள், சைக்கிள் உதிரிப்பாகங்கள்
- உணவுப்பண்டங்கள், மற்றும் பொருட்களை

துறைமுகத்திலிருந்து பாதுகாப்பாக கொண்டு செல்ல எம்மை நாடுங்கள்
நாம் உதவுவோம்.

இறக்குமதியாளர்களுக்கு ஏற்ற ஆலோசனை பெற நாடுங்கள்

**சதாசிவம் வீரவாகு அன் கோ**

(Clearing Agency)

270, செட்டியார் தெரு, கொழும்பு 11.

தொலைபேசி: 24481

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் அருள்
சகலருக்கும் கிட்டட்டும்

யாழ். நகரில் சிறந்த சைவஹோட்டல்

**ஸ்ரீ தாமோதர விலாஸ்**

289, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 7065

நகரில் பிரபல்யமான ஸ்தாபனம்
சாய்ப்புச்சாமான் பெற நாடுங்கள்

**ஸ்ரீ ராமகிருஷ்ணாஸ்**

இல. 9 நவீனசந்தை. யாழ்ப்பாணம்.
ஹலோ: 7497

அருள்மிகு நயினை நாகபூஷணி அம்பாளின் திருவருள் எல்லோருக்கும் பாலிக்க வேண்டுகிறோம்


அம்பாள் திருவருளை நாடும்

**மலாயன் கபே**

(சிறந்த சைவ சிற்றுண்டிச்சாலை)

36-38, பெரியகடை, யாழ்ப்பாணம்.

கெம்பீரமாகப்
பிரயாணஞ் செய்யுங்கள்..
புத்தம் புதிய
## ஒல்வின் புஷ்பெக்கில்



இரண்டு சக்கரங்களில்
உங்கள் உன்னத முதலீடு

1
7 அற்புதமான வர்ணங்கள்.
பிரகாசமான, துருப்பிடிக்காத;
நெடுங்கால உழைப்பிற் கென்றே
செய்யப்பட்ட எலெக்ரோ ஸ்டாடிக்
பெயின்டிங்

2
கஷ்ட மில்லாத புறப்படுகை அதி பிரகாச
மான வெளிச்சம், ஒலிமிக்க ஹோர்ன்
இவற்றிற்கென உயர்-சக்தியுள்ள
மக்னெற்றோ.

3
வருடக்கணக்கில்
நற்சேவை தரும்
எந்திரவியல்
உருவ அமைப்பு

12 மாதங்கள்
அல்லது 10,000 கி.மீ.க்கு
உத்தரவாதம்

4
பூரண சமன் பாட்டிற்கும், பாதுகாப்புக்கு
மென மத்தியில் அமைக்கப்பட்ட சக்திமிக்க
150 c. c. என்ஜின்

விற்பனையின் பின்னர்
பூரண சேவை, பெருமளவு
உதிரிப்பாகங்கள்
கைவசமுண்டு

அறிமுகத்திற்கு
விசேஷ சகாயவிலை!
தவணைமுறையில்
பணம் கட்டும் சலுகை!!

5
மிகக் கடினமான ரோட்டுக்களிலும்
பாது காப்பாகவும், நம்பிக்கையுடனும்
செல்ல வென்று,
விசேஷ ஸ்கூட்டர் பரீட்சை பாதை
களில் 279 கடினப்பரீட்சைகள்.

முதல் 3 சேவிஸ்களும் இலவசம்.

நாடு முழுவதிலும் விற்பனையாளர்கள்
இப்பொழுது நியமிக்கப்படுகிறார்கள்

கெம்பீரமாக-இன்றே பதிவு செய்யுங்கள்
MH மில்லேயிசன் அன்ட் ஹூக் லிட்.
47/19 காலி முக டெறஸ் கொழும்பு 3 டெலிபோன்: 25979


## தேசாய் திரும்பினார்

(புதுடில்லி)

வெளிநாடுகளில் சுற்றுப் பிரயாணம் மேற்கொண்டிருந்த இந்தியப்பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் தமது 12 பிரயாணத்தையும் முடித்துக்கொண்டு நாடு திரும்பியுள்ளார்.

---

## டி. ஐ. ஜி சுந்தரலிங்கத்துக்கு புதியபதவி

(கொழும்பு)

பிரதிப் பொலிஸ்மா அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் இலங்கை குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

வன்னிப் பாதுகாப்புக்கும் இவரே பொறுப்பாக இருப்பார்.

இவரின் 4 பொலிஸ் அதிபர்கள் இலங்கையின் 22 மாவட்டங்களிலுள்ள குற்றத்தடுப்பு டைவிசன்களுக்கும் இவரே பொறுப்பாக இருப்பார்

(ஈ-இ)

## வடபிராந்திய டி.ஐ.ஜி

(கொழும்பு)

வடபிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபராக திரு. எஸ். ஜே. கி. செல்லத்துரை நியமிக்கப் பட்டுள்ளார்.

தென்பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபராக திரு. ஏ. மகேந்திரன் நியமிக்கப் பட்டுள்ளார். (ஈ-இ)

## கருத்தரங்கு

(பருத்தித்துறை)

"சுற்றுச் சூழல் மாசடைதல்" பற்றிய கருத்தரங்கு ஒன்று இம் மாதம் 25-ம் திகதி முதல் 28-ம் திகதிவரை தொண்டமனாறு தேசிய கல்வி கள ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெறவிருக்கின்றது இக் கருத்தரங்கில் பங்குபற்றுபவர்களிலிருந்து தெரிவாகும் இலர் செப்டெம்பர் மாதம் கல்கத்தா நகரில் நடைபெறவிருக்கும் கருத்தரங்கிற்கு அனுப்பிவைக்கப்படுவார்கள்.

இக் கருத்தரங்கில் ஒவ்வொரு பாடசாலையிலுமிருந்து ஒரு ஆசிரியரும் நான்கு மாணவர்களும் கலந்து கொள்வர். கருத்தரங்கிற்கான ஒழுங்குகளை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வ. க. ஈசரபாதம் செய்து வருகின்றார். (உ)

## விவசாயிகள் கஷ்டம்

(முத்தையன்கட்டு)

முத்தையன்கட்டு படித்த வாலிபர் திட்ட விவசாயிகளுக்கு யானைகளாலும் காட்டெருமைகளாலும் தொல்லைகள் ஏற்பட்டு வருவதாக கவலை தெரிவிக்கப்படுகிறது.

மாலைவேளைகளில் வரும் யானைக்கூட்டம் வாழைமரம், தென்னம்பிள்ளைகளை நாசம் செய்வதுடன் மிளகாய்க்கன்றுகளையும் மிதித்து அழித்துவிடுகின்றதாம் பாதைகளில் பகல் வேளைகளிலும் யானைக்கூட்டம் நடமாடுவதாகக் கூறப்படுகின்றது; காட்டெருமைகளும் மேய்ச்சலுக்கு வருவதுடன் பயிர்களையும் நாசம் செய்து விடுவதாகவும் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளார்கள். [தெல்-நி]

---

(முழங்காவில்)

முழங்காவில் குளாய் வெளிதிட்ட விவசாயிகள் சங்க நிர்வாகிகள் பின் வருமாறு:

தலைவர்: திரு இ சந்திரன், உப-தலைவர்: திரு. த. ஞானமூர்த்தி, நிர்வாகக்காரியதரிசிகள்: திரு சோ யோகசுந்தரம் திரு அ புவனேந்திரன், பொருளாளர்: திரு க ஜெயபாலன், செயற்குழு உறுப்பினர்: திருவாளர்கள் லவ யோகேஸ்வரன், க கந்தசாமி, மா தெய்வேந்திரன்.

